Arima Nokku

# அரிமா நோக்கு

2:4 சனவரி 2009

ரூ.20

ஆசிரியர் : ஈரோடு தமிழன்பன்



மொழி, இலக்கியம், கலை, பண்பாடு, வரலாறு, மெய்யியல், அறிவியல்சார் பன்னாட்டுக் காலாண்டிதழ்

International Quarterly on Language, Literature, Art, Culture, History, Philosophy and Science

அரிமா நோக்கு

2:4 சனவரி 2009


நார்மன் கட்லர்
- வ. ஜெயதேவன் 03

இலக்கியத்துறையில்
தமிழ் வளர்ச்சிக்குரிய
ஆக்கப் பணிகள்
- பெருஞ்சித்திரனார் 04

க்ரியாவின் தற்காலத்
தமிழ் அகராதி
- சீதாலட்சுமி 14

சிவவாக்கியரின்
எதிர்ப்பிலக்கியம்
- துரை. சீனிச்சாமி 25

ஐம்பெருங்காப்பியங்களில்
பெண்ணியச் சிந்தனைகள்
- சோ. கோதை ஈசுவரி 35

வ.உ.சி.யின் பதிப்புப்பணி
- இரா. வெங்கடேசன் 38

திருக்குறளில் அறிவியல்
- பழ. முத்துவீரப்பன் 40

Art Versus Pornography: A Bed-
room Scene from Aka<u>n</u>ā<u>n</u>ūru
- P. Maruthanayakam 45

ஜூசி ஸ்டோன்
- இரா. பிரேமா 59

திணை துறை கூற்று பொருள்
அறிமுக விளக்கம்
- தமிழண்ணல் 62

TRANSLATION OF TAMIL CASE
FEATURES INTO ENGLISH
– Saranya 67


நூல், ஆய்வாளர் அறிமுகம்,
கவிதைகள், துணுக்குகள்


படைப்புகளைச் சுருக்கவும்,
திருத்தவும், மாற்றவும்
பதிப்பாளருக்கு உரிமை உண்டு.
முன்இசைவின்றி இவ்விதழிலிருந்து
எதனையும் எடுத்தாளலாகாது.


# தலைவாயில்

ஈரோடு தமிழன்பன்

## சுற்றுலாத் துறையும் சுருக்கமான தமிழிலக்கிய வரலாறும்

ஆண்டுகள் பலவற்றுக்குமுன் - நடுவணரசு நடத்திய ஒரு தேசியக்
கருத்தரங்கில் தமிழக அரசின் சார்பில் கலந்து கொள்ளத் திருவனந்தபுரம்
சென்றிருந்தேன். கலை, மொழி, பண்பாட்டுத் தளங்களில் ஒருங்கிணைவு
காண்பது குறித்ததான அக்கருத்தரங்கில் - இந்தியாவில் பல்வேறு
மாநிலங்களிலிருந்தும் வந்திருந்த பேராளர்கள் பங்கேற்றனர். கருத்தரங்கம்
வாய்ப்பளித்த ஓய்வுப் பொழுதுகளில் திருவனந்தபுரத்திலும் அதன் அக்கம்
பக்கத்திலும் உள்ள சுற்றுலாச் சிறப்பிடங்களுக்கு எங்களை அழைத்துச்
சென்றனர். சுற்றுலாவுக்குரிய இடங்களில்-அவற்றின் தொன்மை, தனித்தன்மை,
வரலாறு, மற்றுமுள மேன்மைகள் குறித்தான விவரங்களை அழகிய முறையில்
தயாரித்துக் கொடுக்கும் *தகவல்* மையங்களில் என் கவனத்தைச் சட்டென்று
ஈர்த்துக் கட்டிப்போட்ட ஆங்கில நூல் *சுருக்கமான மலையாள இலக்கிய*
*வரலாறு.* தங்கள் மண்ணில் பாதம் பதிப்பவர்கள் காட்சிக்குரியன மட்டும்
கண்டு சென்றால் போதாது: கருத்துக்கு உரியனவாக உள்ள தம் தாய்மொழி
இலக்கியங்கள் பற்றிய எண்ணங்களையும் ஏந்திச் செல்லவேண்டும் என்பது
அவர்கள் நோக்கமாக இருப்பதைக் கண்டு வியப்பும் மகிழ்ச்சியும் அடைந்தேன்.
*சுருக்கமான மலையாள இலக்கிய வரலாறு* என்னும் அச்சிறு நூலைப்
படித்தபோது-இளங்கோவடிகள் இயற்றிய சிலப்பதிகாரம் இடம்பெற்றிருந்ததைக்
கண்டேன். மலையாள மொழிக்கும் சிலப்பதிகாரத்திற்கும் என்ன தொடர்பு என்று
நமக்குக் கேட்கத் தோன்றும். ஆனால், அந்நூலில் கேரளம் தமிழுக்குத் தந்த
கொடை சிலப்பதிகாரம் என்று எழுதி - கேரளமாக - மலையாளமொழி பயிலும்
பரப்பாக இல்லாத காலத்தில் - தமிழகமாக - [சேரநாடாக] தமிழ்பேசும்
நிலப்பரப்பாக இருந்த நாளில் அது யாக்கப்பட்டிருந்தாலும் - காலம் முன்
பின்னெல்லாம் கணக்கிலே எடுத்துக் கொள்ளாமல் தமது ஆசைபற்றிய கருத்தை
வெளிப்படுத்தியிருந்தனர். குலசேகர ஆழ்வார் வடமொழியில் யாத்தவற்றையும் -
கேரளம் சமற்கிருதத்திற்குச் செய்த கொடை என்றே அந்நூலில்
குறிப்பிட்டிருந்தனர்.

தமிழ்நாட்டின் சுற்றுலாத் துறை சுற்றுலாப் பயணிகளாக இந்தியாவின் பிற
பகுதிகளிலிருந்தும் உலக நாடுகளிலிருந்தும் வருபவர்களிடம் வழங்க
ஆங்கிலத்தில் சுருக்கமான தமிழ் இலக்கிய வரலாற்று நூலைத் தயாரிக்க
வேண்டும். தகவல் மையங்களின் பரிமாணத்தைக் கூடுதலாக்குவதில் -
செயற்பாடுகளில் புதியன படைப்பதற்கு இன்னும் எத்தனையோ வளர்ச்சி
நிலைகளை உருவாக்கலாம். எடுத்துக்காட்டாக, வள்ளுவர் கோட்டத்தில்
வள்ளுவர்படம்; குறள்பாக்கள் பொறிக்கப்பட்ட தேநீர்க்கோப்பை, சாவிக்கொத்து,
எழுதுகோல்கள், நாட்காட்டிகள், குறிப்பேடுகள் - விளையாட்டுப் பொருள்கள்,
சட்டை, துணிமணிகள் - என்று எவ்வளவோ பொருள்களை அங்கு வருபவர்கள்
நினைவுப் பொருள்களாக எடுத்துச் செல்ல வாய்ப்பை ஏற்படுத்தலாம். அங்கங்கு
இரண்டு மூன்று இடங்களில் செய்திப்படத் திரையிடு சிற்றரங்கை நிறுவலாம்.
வள்ளுவர் கோட்டம் உருவான வரலாறு, மற்றும் சான்றோர்களின்
உரைப்பதிவுகள் ஆகியனவற்றைக் காண - கேட்க ஏற்பாடு இயற்றலாம். எழில்
கொஞ்சும் சுற்றுலாக் குறித்த வண்ணப்படங்களோடும் - ஆங்கிலப்
பெயர்ப்புகளோடும் கிடைக்கக்கூடிய வகையில் குறுந்தகடுகள் தயாரித்து
விற்பனைக்கு ஏற்பாடு செய்யலாம். சுற்றுலாச் சிறப்புடைய ஒவ்வொரு இடத்திலும்
இப்படிப் புதிய ஆக்கக் கூறுகளை உருவாக்கிப் பயன்பெறவும், பயன் தரவும்
உரிய முயற்சிகள் தேவை. சுற்றுலா மாளிகையில் தங்கும் விடுதியின்
அறைகளில் திருக்குறள் ஆங்கிலப் பெயர்ப்போடு கூடவே, ஆங்கிலத்தில்
தயாரிக்கப்பட்ட சுருக்கமான தமிழ் இலக்கிய வரலாறும் இடம்பெறலாம்.

## இரண்டாம் ஆண்டு நிறைவு: சிறப்புச் சலுகை




அறிஞர் சோ. ந. கந்தசாமி அவர்கள் எழுதியுள்ள THE EXTERNAL HISTORY OF THE TAMILS என்னும் நூல், புரவலர்களுக்கும் வாழ்நாள் உறுப்பினர்களுக்கும் 50% சிறப்புக் கழிவுடனும் மற்றவர்களுக்கு 30% சிறப்புக் கழிவுடனும் விற்பனையாகிறது.

நோக்கு, 4/1083 நேரு நகர், 2 ஆம் முதன்மைச்சாலை, கொட்டிவாக்கம், சென்னை 600 096
9380626448

## ஆய்வு நெறியாளர்: ஆய்வாளர்: ஆய்வேடு: தகவல் களஞ்சியம்

*விருபா* இணையத் தளமும் *அரிமா* நோக்கு இதழும் இணைந்து தமிழியல் ஆய்வு நெறியாளர்கள், ஆய்வாளர்கள், முனைவர்/ஆய்வியல் நிறைஞர் பட்ட ஆய்வேடுகள் குறித்த தகவல் களஞ்சியம் ஒன்றை இணையத் தளத்தில் அமைக்க முயற்சி மேற்கொண்டுள்ளன. ஆய்வாளர்/நெறியாளர் தமது இயற்பெயர், புனைபெயர், பிறந்த நாள், கல்வித் தகுதி, பணிநிலை, முகவரி, எழுதிய நூல்கள்/கட்டுரைகள் பட்டியல், ஆய்வுச் சுருக்கம், ஆய்வு உள்ளடக்கம் ஆகியவற்றுடன் கடவுச் சீட்டளவில் ஒளிப்படமும் அனுப்ப, மேலதிகத் தகவல்கள் அறியத் தொடர்பு கொள்க: *டி. குமரேசன்,* www.viruba.com பி-1, ஆனந்தம் அடுக்குமாடிக் குடியிருப்பு, 12 ஐயப்பன் தெரு, உள்ளகரம், சென்னை 600 091. செல்: 9840254333 மின்னஞ்சல் t.kumaresan@viruba.com


*ஆசிரியர்*

ஈரோடு தமிழன்பன்

*இணையாசிரியர் (மதிப்புறு நிலை)*

வ. ஜெயதேவன்

*ஆசிரியர் குழு*

சிலம்பொலி சு. செல்லப்பன்

கா. செல்லப்பன்

இரா. இளவரசு

நா. சுப்பிரமணியன் (கனடா)

பொன். செல்வகணபதி

நா. முத்துக்குமார்

சீதாலட்சுமி (சிங்கப்பூர்)

மு. பரமசிவம் (மலேசியா)

பத்மாவதி விவேகானந்தன்

இரா. பிரேமா

பா. இரவிக்குமார்

*அறிவுரைக் குழு*

இந்தியாவிலும் அயல் நாடுகளிலும் உள்ள தமிழியல் அறிஞர்கள், பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் மற்றும் படைப்பாளிகள்

*பதிப்பாளர்*

இரா. பன்னிருகைவடிவேலன்

*துணைப் பதிப்பாளர்*

'விழிகள்' தி. நடராசன்


## கட்டண விவரம்

| | | |
|---|---|---|
| ஈராண்டுக் கட்டணம் | ரூ. 150/ | US $ 10 |
| வாழ்நாள் கட்டணம் | ரூ. 2000/- | US $ 100 |
| புரவலர் கட்டணம் | ரூ. 5000/- | US $ 200 |
| நிறுவனம் சார் உறுப்பினர் (Institutional Membership) | ரூ. 10,000/- | $ 500 |

- நிறுவனம் சார் உறுப்பினர்களுக்கு வாழ்நாள் முழுதும் நோக்கு இதழ் வழங்கப்படும்; நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 60% சிறப்புக் கழிவும் அளிக்கப்படும்.
- புரவலர்களுக்கு அவர்கள் வாழ்நாள் முழுதும் நோக்கு இதழ் வழங்கப்படும்; நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 50% சிறப்புக் கழிவும் அளிக்கப்படும்.
- வாழ்நாள் உறுப்பினர்களுக்கு அவர்கள் வாழ்நாள் முழுதும் நோக்கு இதழ் வழங்கப்படும்; நோக்கு வெளியிடும் ஒவ்வொரு நூலுக்கும் 30% சிறப்புக் கழிவும் அளிக்கப்படும்.

### விளம்பரக் கட்டணம்

| | | |
|---|---|---|
| பின்னட்டை (பல வண்ணங்கள்) | ரூ. | 15,000 |
| உள்ளட்டை (பல வண்ணங்கள்) | ரூ. | 10,000 |
| முழுப்பக்கம் (கருமை & வெண்மை) | ரூ. | 3,000 |
| அரைப்பக்கம் (கருமை & வெண்மை) | ரூ. | 1,500 |

*தொடர்ந்து ஓராண்டு (நான்கு இதழ்களுக்கு) அளிக்கப்படும் விளம்பரங்களுக்கும் 10% சிறப்புக் கழிவு உண்டு. முன்பணம் செலுத்தி முகமை பெற விழையும் முகவர்களும் இவ்விதழில் விளம்பரம் செய்ய விழையும் வாணிகம் மற்றும் விளம்பர முகைமை நிறுவனத்தாரும் தொடர்பு கொள்ளலாம்.*


அரிமா நோக்கு

4/1083 நேரு நகர், 2ஆவது முதன்மைச் சாலை

கொட்டிவாக்கம், சென்னை 600 096

வலைத்தளம்: www.arimaanokku.com மின் அஞ்சல்: tamilnokku@rediffmail.com செல்: 9380626448